**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 023/2023** **நாள்: 01.08.2023**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' - லாவோட்சே**

## என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நம் அடைக்கலத்தாயின் அருளும் ஆசீரும் உங்கள் ஒவ்வொருவரோடும் இருப்பதாக!**

ஆகஸ்டு மாதம் அடைக்கல அன்னை சபையாருக்கு
அளவில்லாத மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தின் காலம்.
நம் சபையின் பாதுகாவலியும்
நம் இல்லங்கள் நிறுவனங்களை
இரவிலும் வலம் வந்து பாதுகாப்பவருமான
நம் அடைக்கலத்தாயின் திருநாளை
அடைக்கல புதல்வியராக நாம் கொண்டாடி மகிழும் மாதம் இது.
எனவே அனைவரும் உள்ள உவகையோடு நெஞ்சம் நிறைந்து
ஒருவரை ஒருவர் வாழ்த்துவோம்.
இந்த நாட்களில் நம் தாய்சபையின் வரலாற்றை உற்றுநோக்கி
நம் வாழ்வில் அதன் தனிப்பண்புகள் வெளிப்படுகிறதா?
என கூர்ந்து நோக்கி ஆய்வு செய்வோம்.

**ஆழ்ந்த இறைபற்றில் வேரூன்றி வளர்ந்தது அடைக்கல அன்னை சபை.**

இறைபற்றுருதி என்பது செபம் சொல்வது அல்ல.
நம்வாழ்வு இயல்பான செபமாக மாறுவது.

**"நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள்" ( 1 கொரி 10:31)**

என்ற பவுலடியாரின் வாக்குக்கு இணங்கி
நாம் எதைச் செய்தாலும் செபிப்பதாகவே இருக்க வேண்டும்.
அப்படிப்பட்ட ஆழமான இறைபற்றுருதி நம்மிடம் இருக்கிறதா?
என யோசித்துப் பார்ப்போம்.

இதற்கு நம் மனங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.
மூச்சு விடுவதுபோல் இறைபிரக்கினை நமதாக மாற வேண்டும்.
இறை உணர்வில்லா எந்த நொடியும் இல்லை
என்ற நிலை உருவாக வேண்டும்.
இதற்கு எளிய மனமும் இறைவனே என் தொடக்கமும் முடிவும்
என்ற ஆழமான புரிதலும் வேண்டும்.
நான் இதைச்செய்வதால் என் இறைவன் மகிழ்ச்சியடைகிறாரா?
என ஒவ்வொரு நொடியும் கேட்டுப்பார்க்க வேண்டும்.
இயல்பான எளிய மனிதர்களே இறைவனுக்கு
வெகு அருகில் விரைவாகச் செல்கிறார்கள்.
எனவே நம் உள்ளங்களை வெறுமையாக்குவோம்.
எப்போதும் இறைபிரசன்ன உணர்வில் வாழ்வோம்.

## அசையா நம்பிக்கையில் வேரூன்றி வளர்ந்தது அடைக்கல அன்னை சபை.

நாம் நம்பிக்கையில் வேரூன்றி இருக்க வேண்டுமெனில்
நம்மில் ஒரே மனம் வேண்டும்
திட சித்தம் வேண்டும்.
பல சமயங்களில் நாம் பிளவுபட்ட மனத்தோடு செயல்படுகிறோம்.
நாம் நம்பினாலும் நம்மில் ஆழமான ஏதோ ஒன்று
நம்பிக்கைக்கு மாறாக நம்முள் இருந்து
எதிர்குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.
விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்
அந்த எதிர்குரல் ஒலித்துக்கொண்டிருப்பதனால்
நம்மால் ஒரே மனத்தோடு திடமான உறுதிப்பாட்டோடு
நிலைத்திருக்க முடிவதில்லை.
மிக எளிதாக நாம் தோற்றுப்போகிறோம்.
எனவே என்ன நடந்தாலும் கடல் பொங்கி வந்தாலும்
மலைபெயர்ந்து நம் எதிரே நினறாலும்
நம்பிக்கையில் வேரூன்றி நிலைபெயராதிருப்போம்.
ஆண்டவரில் வேரூன்றி இருப்பவர்களால் மட்டுமே இது சாத்தியமாகும்.

## எளிய மனமே அடைக்கல அன்னை சபையின் அடையாளம்.

ஆரம்பமுதலே எளிய சாதாரன அருட்சகோதரிகளைக் கொண்டே
அடைக்கல அன்னை சபை செயல்பட்டு வந்தது.
அவர்களது பேச்சு நடை உடை பாவனைகள் வாழ்விடங்கள்

எல்லாவற்றிலும் எளிமை வேரூன்றி இருப்பதை
அனைவரும் அடையாளம் காணமுடிந்தது.
இத்தகைய எளிய மனம்தான்
அவர்களை பங்கு மக்களோடும்
கருணை குடில் இல்லக்குழந்தைகளோடும்
பள்ளி ஆசிரியர் மாணவ மாணவிகளோடும்
கரிசனையான தாய்க்குரிய அணுகுமுறையை
மேற்கொள்ளக் காரணமாயிருந்தது.
எல்லோரையும் கரிசனையோடு உபசரித்த விருந்தோம்பல் சகோதரிகள்
என்ற அடைமொழியையும் பெற்றுத் தந்தது.
இந்த எளிய மனம் நம்மிடம் எத்தனை விழுக்காடு
நிலைபெற்றிருக்கிறது என ஆய்வு செய்வோம்.

**மகிழ்ச்சியுடன் விரும்பி ஏற்ற ஏழ்மை அடைக்கல அன்னை சபையின் அடித்தளம்.**

நம் சகோதரிகளின் வாழ்வும்
ஏழ்மை வாழ்வாக இருந்ததை நாம் அறிவோம்.
நம் இல்லங்கள் ஒருபோதும் வசதி நிறைந்த
இல்லங்களாக இருந்ததில்லை.
Wash Room கொண்ட தனி அறைகள்
நவீன இல்லங்களில் தான் உண்டு என்பதும் நாம் அறிந்தது.
அன்று நம் சகோதரிகள் எந்த வசதிக்குறைவுக்காகவும்
யாரும் சலித்துக் கொண்டதுமில்லை
குறைபட்டுக் கொண்டதுமில்லை.
இன்று வசதிகள் பெருகிவிட்டன
குறைகள் உடனுக்குடன் சரிசெய்து கொடுக்கப்பட்டாலும்
அதிருப்திகள் பெருகுகின்றன.
எத்தனையோ வசதிக்குறைகளை
மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் ஏற்றுக் கொண்ட பாரம்பரியம்
இன்று காணாமல் போவது வருத்தமளிக்கிறது.
நாமாகவே உருவாக்கிக்கொள்ளும்
வசதிக்குறைகள் நாளும் பெருகுகின்றன.
குறிப்பாக நமது இல்லங்களில் பணியாளர்கள்
அமைதியாகப் பணிசெய்யும் சூழல் இல்லை.
நல்ல சூழல் இருந்தாலும் பணிப்பெண்கள் இல்லை.

இப்படி வசதிக்குறைகள் நாளும் நம்மை வந்தடைகின்றன.
இந்தச் சூழலில் இல்லாமையை, வசதிக்குறையை
மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வது பெரும் சவாலாய் உள்ளது.
திருப்தியின்மை நமக்கு நாமே செய்துகொள்ளும் பாதிப்பு.
திருப்தி இல்லை எனில் பாதிப்புக்கு உள்ளாவது
நாம் தான் என உணர்ந்தால்
நம்மை நம்மால் திருப்திப்படுத்திக்கொள்ள இயலும்.
அப்போது நம் மனம் அமைதியடையும்
உடல் மன ஆரோக்கியம் பெருகும்.

## திக்கற்றவர் அனாதைகள் பணியில் காட்டிய தியாகமிக்க அர்ப்பணம் அடைக்கல சபையின் உயிரில் கலந்தது.

அனாதைகளையும் திக்கறவர்களையும் பிரித்து எடுத்துவிட்டால்
அடைக்கல அன்னை சபைக்கென்று தனித்துவம் ஒன்றுமில்லை.
இவைகள் இல்லை எனில் அடைக்கல அன்னை சபைக்கு உயிரில்லை.
இன்று இந்த அடிப்படை அம்சமும் நம் வாழ்வில் கேள்விக்குறியாகியுள்ளது.
இப்பணியில் தியாகமும் அர்ப்பணமும் மேலோங்கி நின்றன.
ஏழைகளுக்காக அனாதைகளுக்காக
எத்தியாகத்தையும் செய்ய முன் வந்தவர்கள் தான்
நம் மூத்த அருட்சகோதரிகள்.
தங்களின் அர்ப்பணம் இவர்களுக்காகவே
என்ற புரிதலில் வாழ்ந்த எத்தனை மூத்தோரை நாம் கண்டிருக்கிறோம்.
நமது Orphan குழந்தைகளோடு தன்னைக் கரைத்துகொண்டவர்கள்,
அடைக்கல செல்வங்களின் வளர்ச்சியில் அன்பைப் பொழிந்தவர்கள்,
பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்ப்பதில் கைதேர்ந்தவர்கள்,
வீடு சந்தித்தலில் மகிழ்ச்சியடைந்தவர்கள்,
தாம் பணியாற்றிய கிராமத்தை
தன் குடும்பமாக நேசித்து உறவை வளர்த்தவர்கள்
இப்படி எண்ணிறந்த அடைக்கல சபையாரை வரலாறு கண்டிருக்கிறது.
இன்று இந்த தியாகமும் அர்ப்பணமும் எந்த நிலையில் இருக்கிறது
என எண்ணிப்பார்ப்பது நம் கடமையல்லவா?
நம் அடைக்கலத்தாயின் நவநாளில் நம் வாழ்வை
மறுபரிசீலனைக்கு ஒப்படைப்போம்.

மீண்டும் வேரோட்டமான
நம் சபையின் விழுமியங்களைப் புதுப்பித்து வாழ்வாக்க முயல்வோம்.

**அடைக்கல அன்னை சபையின் வாழ்வை மதிப்பீடு செய்து**
**விழுமியங்களைப் புதுப்பித்து வாழ்வோம்.**

**<u>அடைக்கல அன்னை விழா தயாரிப்பு:</u>**

- அடைக்கல அன்னை நவநாட்களில் அனைவரும் கண்டிப்பாக உங்கள் குழுமங்களில் இருக்க வேண்டும். உங்கள் குழுமத்தில் நவநாட்களை சிறப்பாக கொண்டாடத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.
- நவநாட்களுக்கான கருத்து, செய்யவேண்டிய நற்செயல் அடங்கிய பட்டியல் பின்இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
- குழுமத்தில் ஓரிரு நாட்களாவது சபை வரலாற்றிலிருந்து சிறுபகுதிகளை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- தனியாக சபை வரலாற்றைப் படித்து உங்களின் அர்ப்பணத்தை ஆழமாக்கிக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு நாளும் சபைத் தலைமை அன்னை 15 நிமிடங்கள் '***அடைக்கல அன்னை அவையின் வாழ்வு நெறி***' என்ற தலைப்பில் ஒரு பண்புநெறி பற்றி உங்களுக்கு உரை நிகழ்த்துவார். அந்த உரை **YOU TUBE CHANNEL** வழியாக உங்களுக்கு அனுப்பப்படும். கொடுக்கப்பட்டுள்ள LINK -ஐப் பயன்படுத்தி குழுமத்தில் அனைவரும் இணைந்து அதனைக் கேட்டு முடிவில் அந்தப் பண்புநெறி நம் வாழ்வில், குழுமங்களில் எவ்வாறு வெளிப்படுகிறது? இல்லை எனில் எவ்வாறு உருவாக்கலாம் என ஆய்வு செய்வோம்.
- விழா நாட்களில் நேர்மறையாகப் பேசுவது, அதிகம் பாராட்டுவது, நன்றி சொல்வது ஆகியவற்றில் ஈடுபடுவோம். அவசியமற்ற எதிர்மறை உரையாடல்களைத் தவிர்த்துவிடுவோம்.

**அடைக்கல அன்னை விழா ஆகஸ்டு13 - விளக்கம்**

அடைக்கல அன்னை விழாவை ஆகஸ்டு 13 – ம் நாள் கொண்டடுவது ஏன் என்ற கேள்விக்கு பலருக்கு விளக்கம் தெரியவில்லை என்ற கோரிக்கை வந்ததால் அதற்கான விளக்கம் இங்கு தருகிறோம். பாரம்பரியமாக ஆகஸ்டு 13 மாதா இறந்த நாளாக மக்களால் நம்பப்படுகிறது. மேலும் பழைய Ordo வில் ஆகஸ்டு 13 அன்று பாவிகளின் அடைக்கல திருநாளாகக் கொண்டாடப்பட்டது. அதன் அடிப்படையில் தான் ஆகஸ்டு 13 – ஐ நம் அடைக்கல அன்னை விழாவாகக் கொண்டாடுகிறோம்.

**ஒரு பொழுது அனுசரிப்பது:**

- நம் சபையின் பாரம்பரிய வழக்கப்படி அன்னையின் நவநாளில் வரும் **வெள்ளிக்கிழமை (04.08.2023)** அன்று அனைவரும் ஒருசந்தி அனுசரித்து சபைச் சகோதரிகள் அனைவரும் அர்ப்பண வாழ்வில் வேரூன்றி வளர செபிப்போம்.

**மௌன விரதம்:**

- அன்னையின் நவநாளில் ஏதாவதொரு நாள் முழுமௌனம் அனுசரிப்போம். உங்கள் இல்லத்துச் சகோதரிகள் யார் யார் எந்தெந்த நாட்களில் மௌனம் அனுசரிக்கிறார்கள் என்பதை அறிவிப்புப்பலகை வழி தெரியப்படுத்துங்கள்.

## TNPCRI MEETING:

- சபைப் பெருந்தலைவர்களுக்கான TNPCRI MEETING ஆகஸட் 4 மற்றும் 5 தேதிகளில் பூண்டியில் நடைபெறுகிறது. நமது சபையின் பெருந்தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

## ONLINE MEETING:

- தலைமையகத்தோடு நீங்கள் நேரடியாக வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்ள ONLINE MEETING 06.08.2023 அன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுமத்திற்கும் சிறிய குழுமம் 3 நிமிடங்கள், பெரிய குழுமம் 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. அனைவரையும் சந்திக்க வேண்டும் என்ற இந்த நிகழ்வில் எல்லோரும் கலந்து கொள்ளுங்கள். உங்கள் இல்லத்திற்கான நேர அட்டவணை மாநிலத்தலைவிகள் வழியாக உங்களுக்கு அறிவிக்கப்படும். மாமண்டூரில் அடைக்கல அன்னை விழாவைக் கொண்டாடும் இல்லங்கள் Online - இல் பங்குகொள்வதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

- உங்கள் குழுமத்திலுள்ள சகோதரிகள் அனைவரும் இணைந்து ஏதாவது ஒரு முறையில் அடைக்கல அன்னையின் விழா வாழ்த்துக்களை அனைத்து சகோதரிகளோடும் பகிர்ந்து கொள்ளுங்கள். பாடல், Skit இப்படி ஏதாவது ஒன்றின் வழி வாழ்த்துங்கள். உங்கள் செய்திகள் புகழ்ச்சி, மகிழ்ச்சி, நன்றியாக மட்டுமே இருப்பது அவசியம்.

- Online சந்திப்பில் உங்கள் நிகழ்ச்சி எல்லோருக்கும் சரியாகச் சென்று சேரும் வகையில் குழுமத்தில் உள்ள அனைவரும் இணைந்து பங்குகொள்ளும் அந்த நிகழ்வை video-வாகப் பதிவுசெய்து 5 -ஆம் தேதிக்குள் livefbsgeneralate@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது **9487291947** என்ற Whatsapp Number -க்கு அனுப்பி விடுங்கள்.

- உங்கள் Online சந்திப்பின்போது அந்த video முதலில் play பண்ணப்படும். தொடர்ந்து உங்கள் குழுமத்தை நேரில் பார்த்து உரையாட சில நிமிடங்கள் கொடுக்கப்படும்.

- தயவு கூர்ந்து அனைவரும் தயாராக இருந்துகொண்டு video எடுங்கள். நேரத்தைக் கவனமாகக் கையாளுங்கள். உங்களுக்கான நேரத்தில் Online disturbance காரனமாக தடங்கல் ஏற்பட்டால் மையச் செயலர் சகோதரியை தொடர்பு கொள்ளுங்கள் அமர்வின் இறுதியில் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

- Online சந்திப்பு **ஆகஸ்டு 6 ஞாயிற்றுக்கிழமை** காலை 8 மணி முதல் தொடங்கும்.

**விழாக் கொண்டாட்டம்:**

- அன்னையை பெருமைப்படுத்தும் விதமாக சிறப்புத் திருப்பலிக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

- முடிந்தவரை விழாவை நம் உடன் உழைப்பாளர்களான ஆசிரியப்பெருமக்கள், அலுவலகப் பணியாளர்கள் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் ஆகியோரோடு கொண்டாடுங்கள்.

- விருந்தினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்யுங்கள்.

- உங்கள் இல்லத்தில் கலந்துபேசி நவநாட்களில் ஒருநாள் நம்மைச் சுற்றியுள்ள ஏழைகளுக்கு உணவோ, உணவுப்பொருட்களோ கொடுங்கள். உங்கள் சக்திக்கு ஏற்றபடி இதனைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.

- இயற்கை சூழலை பாதுகாக்கும் வகையில் ஆசிரியர் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி அதனை வளர்க்க அவர்களை ஊக்குவிப்பது சிறப்பானது.

**சிறப்பு அடைக்கல அன்னை விழா கொண்டாட்டம்:**

இந்த ஆண்டு நமது மாமண்டூர் புதிய யெருசலேம் ஜெபமையத்தைப் புதிப்பித்து மக்களும் அருட்சகோதரிகளும் இறைபற்றுருதியில் வளர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்னைக்கு அருகாமையில் உள்ள இல்லச் சகோதரிகள் அனைவரும் இணைந்து மாமண்டூர் இல்லத்தில் அடைக்கல அன்னை விழா கொண்டாட முடிவெடுத்துள்ளோம். எனவே இந்த ஆண்டு **13.08.2023 அன்று அடைக்கல அன்னை விழா மாமண்டூரில் கொண்டாடப்படும்** நேரில் பங்கு கொள்ளும் குழுமங்கள் Online சந்திப்பில் பங்குகொள்ளமாட்டார்கள்.

**மாமண்டூரில் அடைக்கல அன்னை விழா கொண்டாடுவோர் கவனத்திற்கு**

- ✓ அனைவரும் காலை 8 மணிக்கு மாமண்டூரில் இருக்க வேண்டும்.
- ✓ முந்திய இரவு வந்து சேர்பவர்கள் உங்கள் பெயர்களை சகோ.இராஜாத்தி அவர்களுக்கு அறிவித்து விடுங்கள்.

**நிகழ்வன**

| | |
|---|---|
| 7.30 A.M | - Gathering |
| 8.00 A.M | - Breakfast |
| 8.30 A.M | - Welcome |
| 9.00 A.M | - Adoration – Common. (நன்றி நிறை நெஞ்சம்) |
| 10.00 A.M | - Silent Meditation. |
| 11.00 A.M | - Coffee break. |
| 11.30 A.M | - Holy Eucharist. |
| 1.00 P.M | - Lunch. |
| 2.30 P.M | - Culturals. |
| 4.00 P.M | - Tea. |
| 4.30 P.M | - Good bye. |

**குறிப்பு:**

- ★ நமது கலைநிகழ்ச்சிகள் குழு நிகழ்ச்சிகளாக இருக்க வேண்டும்.

  குறைந்தது ஒரு குழுவில் 4 பேர் இருக்க வேண்டும். அதிகமாக எத்தனை பேரும் கலந்து கொள்ளலாம்.

- ★ பெரிய குழுமங்களுக்கு மட்டும் நிகழ்ச்சிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.அருகாமையில் உள்ள சிறிய இல்லச்சகோதரிகளும் உங்கள் நேரத்தை ஒதுக்கி நிகழ்ச்சியில் கலந்து கொள்வது வரவேற்கப்படுகிறது.

| S.No | நிகழ்ச்சி | ஒதுக்கப்பட்ட நேரம் | குழுமம் | பொறுப்பாளர் |
|---|---|---|---|---|
| 01 | Song | 4 நிமிடம் | மாமண்டூர் | சகோ.இராஜாத்தி |
| 02 | Dance | 5 நிமிடம் | மௌளச்சூர் | சகோ.நர்மதா |
| 03 | Comic | 7 நிமிடம் | பல்லாவரம் | சகோ.அருள் |
| 04 | Street Play | 7 நிமிடம் | பூந்தமல்லி | நவக்கன்னியர் |
| 05 | Skit | 7 நிமிடம் | காஞ்சிபுரம் | சகோ.கலா |
| 06 | Dance | 5 நிமிடம் | மாமண்டூர் | Special School Children |
| 07 | விளையாட்டு | 10 நிமிடம் | சபைத்தலைமையகம் | சகோ.சபினா<br>சகோ.கிளமென்சியா<br>சகோ.பிரேமா |
| 08 | பட்டிமன்றம் | 15 நிமிடம் | மைலாப்பூர் | சகோ.லதா |

**பட்டிமன்ற தலைப்பு : "அடைக்கல அன்னை சபைச் சகோதரிகள் வாழ்வில் விஞ்சி நிற்பது தனிவர ஆர்வமா? கூட்டொருமை ஆர்வமா?**

நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பான சகோதரிகள் மற்ற சகோதரிகளோடு தொடர்பு கொண்டு உங்கள் குழுவை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

**குறிப்பு:**

விழா தயாரிப்புக்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்படும் இதைப்பற்றி உங்கள் மாநிலத்தலைவி உங்களோடு தொடர்பு கொண்டு தெரியப்படுத்துவார்.

**சகோதரிகள் கவனிக்க:**

உங்கள் இல்லத்தில் அடைக்கல அன்னை விழா கொண்டாடுவது மிக முக்கியமானது எனவே மாமண்டூர் கூட்டொருங்கிணைப்பு விழாவில் பங்கு கொள்வோர் நவநாட்களில் ஒருநாள் உங்கள் இல்லத்தில் விழா கொண்டாடுங்கள். பொதுவில் விழா கொண்டாடினாலும் இல்லத்தில், பணித்தளங்களில் அடைக்கல அன்னையை மகிமைப்படுத்துவதன் முக்கியத்துவம் குறையாமல் பார்த்துக் கொள்வோம்.

**பாதிக்கப்பட்டவர்களோடு தோழமை:**

இனக்கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழ்வையும் உரிமைகளையும் இழந்து வாடும் மணிப்பூர் மக்களை நேரில் சந்தித்து AFFI (All Franciscan Family of India) சார்பாக ஒரு சிறிய குழு இந்திய பிரான்சிஸ்கன் துறவிகளாக பாதிக்கப்பட்ட மக்களை

மறு கட்டமைக்க முயற்சிகள் மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. எமது பயணம் பாதுகாப்பாக அமையவும் பயனுள்ளதாக இருக்கவும் அன்போடு செபிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**வடமாநிலச் சகோதரிகள்:**

நம் வடமாநிலச் சகோதரிகள் நிலையற்ற காலநிலை, பழக்கமற்ற உணவுகள், வித்தயாசமான மொழி, கலாச்சார பின்னணியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு பணி செய்கிறார்கள். அவர்களை நெஞ்சாரப் பாராட்டுவோம்.

அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் சிறப்பாக அமைந்திருந்தன. அவர்களின் ஒன்று கூடுதலே பெரும் ஆற்றலாக வெளிப்பட்டது. இறைவனுக்கு நன்றி.

எண்ணிக்கையில் குறைவாயுள்ள நம் சகோதரிகள் மிகுந்த சிரமத்தை மேற்கொண்டு **9 இளம் பெண்களை விருப்பநிலைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்**. அவர்களின் கடின முயற்சியை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். நமது தமிழகத்திலும் **9 விருப்பநிலையினர்** சேர்ந்துள்ளார்கள். இந்த எண்ணிக்கை குறைவானது என்பதும் நமது முயற்சி குறைவாய் உள்ளது என்பதும் நான் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. உழைத்த அனைவரையும் பாராட்டுகிறோம்.

## சபைத் தலைமை அன்னையின் ஆகஸ்டு மாதப் பணித்திட்டம்

01 - 03 - சபைத்தலைமையகம்

04 - 05 - TNCRI Meeting – பூண்டி

06 - சபைத்தலைமையகம் - Online அடைக்கல அன்னை விழா வாழ்த்துப்பகிர்வு

07 - 09 - மணிப்பூர் - பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தல்.

10 - கிறிஸ்தவ தலித்மக்களை SC பட்டியலில் சேர்க்க – கருப்பு தின ஆர்பாட்டம் - திருவள்ளூர்

11 - மயிலை மற்றும் மூத்த அன்னையர் சந்தித்து அடைக்கல அன்னைவிழா வாழ்த்துப் பகிர்வு

12 - தனிசெப நாள் – மௌனம் - மாலை மாமண்டூர்

13 - அடைக்கல அன்னை பெருவிழா - மாமண்டூர்

14 -15 - வெள்ளிவிழா, பொன்விழா சகோதரிகளின்சந்திப்பு – சபைத்தலைமையகம்

| | | |
|---|---|---|
| 16 - 18 | - | அலுவலகப்பணிகள் - திருப்பேராயத்திற்கு அறிக்கை தயாரித்து அனுப்பும் பணி - சபைத்தலைமையகம் |
| 19 | - | ஆவண தயாரிப்புக் குழு கூட்டம் - தஞ்சாவூர் மாநில இல்லம். |
| 20 | - | Spiritual Direction – After 15 Years – அவரவர்க்குக் குறிக்கப்பட்ட இடங்கள் |
| 21 - 25 | - | சபைத்தலைமையகம் - ஆவணகாப்பகத்திற்கான தரவுகள் தொகுப்புப் பணி |
| 26 | - | Mannai College – Bon Secours IAS Accademy தொடக்கம் |
| 27 – 31 | - | திண்டுக்கல் மாநிலம் - நிலப்பத்திரப்பதிவு பணிகள் |

**நம் தாய் அடைக்கல அன்னை**

**உங்களை அனைத்து நலன்களாலும் நிரப்புவாராக!**

**நீவிர் ஆசிக்கும் நன்மைகள் மென்மேலும் பெருகுவதாக!**

**உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்ச்சி பெறுவீர்களாக!**

**மகிழ்ச்சியும் நிறைவும் பொங்கும் வாழ்வை உமக்கு உரிமையாக்குவாராக!**

**நெஞ்சம் நிறைந்து ஆசீர்வதிக்கிறேன்!**

**உள்ளம் உவந்து செபிக்கிறேன்!**



**HAPPY FEAST!**

**DEAR SISTERS**



பிரபஞ்சப் பேரன்பில்,

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை